# உங்கள் கவனத்திற்கு
# கொரோனா வைரஸ் குறித்த அறிவிப்பு

ஜேர்மனியின் பல பகுதிகளில் கொரோனா வைரஸினால் (COVID-19), பாதிக்கப்பட்ட சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளமையால், உங்கள் தனிப்பட்ட உடல் நலத்திலும், பாதுகாப்பிலும் கவனம் செலுத்துவதோடு, ஜேர்மன் பெடரல் சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றும்படி ஜேர்மனியில் வாழும் இலங்கையர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

கீழ் காணும் நபர்கள் குறிப்பிட்ட சுகாதார பிரிவுகளுக்கு சென்று தம்மை பரிசோதித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

- 14 நாட்களுக்குள் வைரஸ் பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு சென்று வந்தவர்கள்
- வைரஸ் பாதிப்புக்குள்ளான பகுதிகளிலுள்ள மக்களோடு பழகிய நபர்கள்.
- வைரஸ் பாதிப்புக்குள்ளான நபர்களோடு நெருக்கமாக பழகியவர்கள்.

கொரோனா (COVID-19), வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளீர்களோ என சந்தேகம் எழுந்தால், உங்கள் குடும்ப வைத்தியரை உடனடியாக அணுகுங்கள். அவசர மருத்துவ உதவி தேவைப்பட்டால் 116117 எனும் தொலைபேசி எண்ணுக்கு அழையுங்கள்.

பெடரல் சுகாதார அமைச்சு கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களை மக்களுக்கு உதவ பகிரங்கப்படுத்தியுள்ளது.

- சுகாதார ஆலோசனை சேவை - 08000117722
- பெடரல் சுகாதார அமைச்சு (மக்கள் தொடர்பு) - 030346465100
- பொது தகவல் மையம் - இல 115 (www.115.de)

ஜேர்மனியில் வாழும் இலங்கையர்களுக்கு உதவும் நோக்குடன், கொரோனா பாதிப்பு குறித்த நிலவரம் அல்லது குறித்த பிரச்சனைகள் தொடர்பாக உதவி செய்வதற்கு ஜேர்மனியின் ஸ்ரீலங்கா தூதுவராலயம் 24 மணி நேர விசேட தொலைபேசி சேவை ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

**+49 1723111944 / +49 1723110026**

மேலதிக விபரங்கள் தேவைப்படின், வார நாட்களில் அலுவலக நேரத்தில் கீழ்க் காணும் தொலைபேசிகள் வழி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

**+49 3080909749 / +49 3080909761**

ஸ்ரீலங்கா தூதுவராலயம்
பேர்லின் - ஜேர்மனி